உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர் 2 Vol. 2 | ஈஸ்வர வருஷ கார்த்திகைமீ 1௳ நவம்பர்—1937 | இதழ் 8 No. 8

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

கொடியனைய இடைதுவள அங்கமும் பொங்கஅங்
குமுதஅமு திதழ்பருகி யிம்பருறுஞ் சங்கையன
குலவியணை முகிலளக முஞ்சரிந் தன்பினின்
பண்புலாவக்
கொடியவிரல் நகநுதியில் புண்படுஞ் சஞ்சலன்
குனகியவ ருடனினிது சம்ப்ரமங் கொண்டுளங்
குரலழிய அவசமுறு குங்குணன கொங்கவிழ்ந்
தோன்று பாய்மேல்
விடமனைய விழிமகளிர் கொங்கையின் பண்புறும்
வினையனியல் பரவுமுயிர் வெந்தழிந் தங்கமும்
மிதமொழிய அறிவில்நெறி பண்பிலண் டுஞ்சகன்
செஞ்சேரீடும்
வெஃகுகனக வொளிகுலவும் அந்தமன் செந்திலென்
றவிழவுள முருகிவரு மனபிலன் தந்திலன
விரவுமிரு சிறுகமல பங்கயந் தந்துகந்
தன்புருதோ

டமிலகு மரவினுட லங்கமும் பங்கிடந்
துதறுமொரு கலபிமிசை வந்தெழுந் தண்டர்தம்
பகையசுர ரனைவருடல் சந்துசந் துங்கதம்
சிந்தும் வேலா
படியவரு மிமையவரு நின்றிறைஞ் செண்குணன்
பழையவிறை யுருவமிலி யன்பர்பங் கன்பெரும்
பருவரல்செய பரமெரிய விண்டிடுஞ் செங்கணன்
கங்கைமான்வாழ்
சடிலமிசை யழகுபுனை கொன்றையும் பண்புறுந்
தருணமதி யினதுறைசெய் துண்டமுஞ் செங்கையோண்
சகலபுவ னமுமொழிக தங்கறங் சங்கியும்
பொங்குநீடும்
சடமருவு விடையரவர் துங்கஅம் பங்கினின்
றுலகுதரு கவுரியுமை கொங்கைதந் தன்புறுந்
தமிழ்விரக வுயர்பரம சங்கரன் கும்பிடுந்
தம்பிரானே.

பதவுரை.

படம் இலகும் அரவின உடல் அங்கம் - படம் விளங்கப்பெற்ற பாம்பினது உடலின் அவயவங்களை, பங்கு இடந்து - கூறுபடுமாறு பிளந்து, உதறும் - காலாலும் மூக்காலும் எடுத்து உதறுகின்ற, ஒரு கலபி மிசை வந்து எழுந்து - ஒப்பற்ற மயிலின்மீது எழுந்தருளி வந்து, அண்டர்தம் பகை - தேவர்களது பகைவர்களாகிய, அசுரர் அனைவர் உடல் - இராக்கதர்கள் எல்லோருடைய உடல்களும், சந்து சந்தும் கதம் - கை கால் இடை முதலிய ஒவ்வொரு சந்துகளும் வேறுபட்டழிய, சிந்தும் வேலா - சிதறச்செய்த வேற்படையை யுடையவரே!, படியவரும் - மண்ணுலகத்தார்களும், இமையவரும் - தேவர்களும், நின்று இறைஞ்சும் - தமது சந்நிதியில் பக்தியுடன் நின்று வணங்குகின்ற எண்குணன் - எட்டு அருட் குணங்களையுடையவரும், பழைய இறை - முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளாக விளங்கும் தனிப்பெருந்தலைவரும், உருவம் இலி - தனக்கென ஓர் உருவமும் இல்லாதவரும், அன்பர் பங்கன் - தம்முடைய மெய்யன்பர்களுக்கு அருந்துணையாயிருப்பவரும், பெரும் பருவரல்

செய் - உலகங்களுக்கு மிகவுந் துன்பத்தைச் செய்த, புரம் எரிய - முப்புரங்களும் வெந்து நீறுபடுமாறு, விண்டிடுஞ் செம் கனல் - அக்கினியை வெளியாக்கிய சிவந்த அக்கினி நேத்திரத்தையுடையவரும், கங்கை மான்வாழ் - மானுக்கு நிகரான கங்காதேவி வாழுகின்ற, சடில்மிசை - சடைமுடியின்மீது. அழகு புனை கொன்றையும் - அழகு பொருந்திய கொன்றைமலரும், பண்பு உறும் - சிறப்பு பொருந்திய, தருணா மதியின் குறைசெய்த் துண்டமும் - இளஞ் சந்திரனது குறைவு பெற்ற துண்டமாகிய பிறையும், ஒண் செங்கை - ஒளிபெற்ற சிவந்த கரத்தில், சகல புவனமும் ஒழிக்க - எல்லா உலகங்களையும் நீறுக்கும் வலியுடன், அங்கு உறங்கு அங்கியும் - அக் கரமலரில் தனது வலி யடங்கியிருக்கும் அக்கினியும், பொங்கி நீடும் - பொலிவுபெற நிலைத்துள்ள, சடம் மருவு விடையர் அவர் - திருமேனியையுடைய இடப வாகனத்தையும் உடையவருமாகிய சிவபெருமானது, துங்க அம் பங்கில் நின்று - தூய்மை பொருந்திய அழகிய இடதுபாகத்தில் நிலை பெற்று இருந்து, உலகு தரு - உலகங்களையெல்லாம் ஈன்றருளியவரும், கவுரி - கவுர நிறத்தையுடையவரும், உமை - உமாதேவியுமாகிய மலைமங்கை, கொங்கை தந்து அன்பு உறும் - திருமுலைப்பால் தந்து அன்பு கொள்ளும், தமிழ் விரக - செந்தமிழிற் சமர்த்தரே!, உயர் பரம - உயர்ந்த பெரிய பொருளே!, சங்கரன் கும்பிடும் - சிவபெருமான் (பிரணவோபதேசம் பெறும்பொருட்டு) வணங்குகின்ற, தம்பிரானே - எப்பொருட்கு மிறைவரே!, கொடி அனைய இடை துவள - கொடியைப்போல் மெலிந்துள்ள இடையானது அசைந்து வாடவும், அங்கமும் பொங்க - உயிரின்புறுவதுடன் சரீரமும் புளகமடையவும், அம் குமுத இதழ் அமுது பருகி - அழகிய குமுத மலரையொத்த இதழிற் பெருகும் அமிர்தத்தைப் பருகி, இன்பு உறும் சங்கையன் - இன்பமடையும் வழக்கமுடையவன், முகில் அளகமுஞ் சரிந்து - மேகத்தையொத்த கருங்கூந்தலும் (துகிலும்) சரிந்து, குலவி அணை - கொண்டாடி மருவுதலால் உண்டாகின்ற, அன்பினின் பண்பு உலாவ - அன்பின் குணம் மிகுதியாக, கொடிய விரல் நகநுதியில் - கொடுந் தொழிலையுடைய விலைமகளிரது நகநுனியினால், புண்படுஞ் சஞ்சலன் - புண்படுகின்ற துன்பத்தையுடையவன், குனகி அவருடன் - சிணுங்கிப்

மயக்கத்தையடையும், குங்குணன் - குறுகிய குணத்தையுடையவன்,
கொங்கு அவிழ்ந்து ஒன்று பாயமேல் - மலர்களின் மகரந்தப் பொடி
சிந்திப் பொருந்தியுள்ள பாய்மீது, விடம் அனைய - கொடிய ஆலகால
விடத்திற்கு நிகரான, விழிமகளிர் - கண்களையுடைய பொதுமகளி
ரது, கொங்கை இன்பு அளபு உறும் - தனங்களின் இன்பத்தை
யடைய அன்புகொள்ளும். வினையன் - தீவினையையுடையவன், இயல்
பாவும் உயிர் அங்கமும் வெந்து அழிந்து - நற்குணம் மிகுந்தறத்
தகுதியுடைய உயிரும் உடலும் காமாக்கினியால் வெந்து தன்னிலையி
னின்றும் அழிந்து, மிதம் ஒழிய - அளவு கெட, அறிவு இல் நெறி
பணியில் - அறிவு இல்லாத தீயவழியின் விதத்தில், அண்டும் சகன் -
பொருந்தியுள்ள உலக மாயையுடையவன், செம் செயநீடும் - செம
மையான வயல்கள் நிலைத்துள்ளதும், வெகு கனக ஒளிசூலவும் அந்த
மன் - மிகுந்த பொற்பிரகாசம் வீசும் அழகு நிலைபெற்றதுமான, செந்
தில் என்று - திருச்செந்தில் என்று கூறி, அவிழ உளம் உருகிவரும்
அன்பு இலன் - கல்போன்ற தன்மை நீங்கி நெகிழ்ந்து உள்ளம்உருகி
அச்செந்திமா நகரத்தைத் தெரிசிக்க வருகின்ற அன்பில்லாதவன்,
தந்து இலன் - பிறருக்குக் கொடுக்கும் இயல்பில்லாதவன், (இத்
தகைய அடியேனுக்கு), விரவும் இரு சிறுகமல பங்கயம் - சிவஞானங்
கலந்துள்ள தாமரையனைய இரண்டு சிறிய திருவடிகளையும், உகந்து
தந்து அன்பு உறுதோ - அடியேனை விரும்பிக்கொடுத்து தேவரீரது
திருவுள்ளம் அன்பு செய்யாதோ ?

பொழிப்புரை.

பறைகுடத்துடன் விளங்கும் பாம்பினது உடலின் அங்கங்கள்
கூறுபட்டுப் பிளக்குமாறு (பாதத்தாலும் மூக்காலும் எடுத்து) உதறு
கின்ற ஒப்பற்ற மயிலின்மிசை எழுந்தருளிவந்து, தேவர்களது பகை
வர்களாகிய அசுரர்கள் அனைவருடைய உடல்களும் கை கால் கழுத்து
இடைமுதலிய சந்துகளும் பூட்டுவிட்டுச் சிந்தும்படிச் சிதறச்செய்த
வேற்படையை யுடையவரே! மண்ணுலகத்தவர்களும் விண்ணுலகத்
தவர்களும் சந்நிதியில் நின்று வணங்கும் எட்டு அருட்குணங்களை
யுடையவரும், அநாதி பரம்பொருளும், எப்பொருட்கு மிறைவரும்,
தனக்கென ஓர் உருவமுமில்லாதவரும், அன்பர்களிடம் துணையாகப்
பொருந்தியுள்ளவரும், உலகிற்குப் பெருந்துன்பத்தைச்செய்த முப்
புரங்களும் எரியுமாறு தீப்பொறியைச் சிந்திய சிவந்த அக்கினி நேத்

திரத்தையுடையவரும், மான்போன்ற பார்வையுடைய கங்காதேவி வாழுகின்ற சடாமுடியின்மீது அழகுபொருந்திய கொன்றைமலரும்: குணத்தாலுயர்ந்த இளமபிறைச்சந்திரனும், ஒளிபெற்ற சிவந்த கரத்திலே சகல லோகங்களையும் நீறுக்கும் வலியுடன் அமைதியோடிருக்கின்ற அக்கினியும், பொலிவுடன் நிலைபெற்றுள்ள மேனியையுடைய இடபதேவரும உடைய சிவபெருமானது பரிசுத்தமபொருந்திய அழகிய வாமபாகத்தில் இருந்துகொண்டு எல்லா வுலகங்களையும் ஈன்றருளியவரும், பொன்னிறத்தை யுடையவருமாகிய உமாதேவியார திருமுலைப்பால் தந்து அன்புகொளளுந தமிழறிவுடையவரே! உயர்ந்த பரமபொருளே! பிரணவோபதேசம பெறுமபொருட்டு சிவபெருமான வணங்குகின்ற தனிப்பெருந் தலைவரே! கொடியையொத்த இடை யசைந்துவாடவும், உடல புளகிக்கவும, அழகிய குமுதமலரை யொத்த இதழிற பெருகும அமிர்தத்தைப்பருகி இன்பத்தையடையும வழக்கத்தையுடையவனும, மேகத்தையொத்த கூந்தலும் துகிலும் சரியக் குலாவியணைகின்றதால் அன்பின தூணம மிகுதியாக விளைகளிரது கொடிய விரல நகநுனியில் புண்படுகின்ற துன்பத்தையுடையவனும, சிணுங்கிப பேசுகின்ற அமமகளிருடன் இனிமையாக மகிழ்ந்துகொண்டு உள்ளமும குரலும மாறுபட்டழிய மயக்கத்தையடையும குறுகிய குணத்தையுடையவனும், மலர்களின் மகரந்தப் பொடி சிந்திப் பொருந்தியுள்ள பாயலின்மிசை கொடிய விடத்திற்கு நிகரான விழிகளையுடைய மாதர்களின் தனபாரங்களின இன்பத்தில் அன்புறும தீவினையை யுடையவனும், நற்குணமடைதற்கு யோக்கியமான உயிரும் உடலும் வெந்தழிந்து தத்தம் நிலைகெட, அறிவற்ற வழியிற் சேர்ந்துள்ள உலக மாயையுடையவனும், செம்மையான வயல்கள் நிலைத்துளளதும் மிகுந்த பொன்னொளியை வீசுவதும் அழகு நிலைபெற்றதுமாகிய திருச்செந்தூர் என்று கூறி நெஞ்சம் நெகிழ்ந்து உருகி அத்திருத்தலத்தைத் தெரிசிக்கவரும் அன்பில்லாதவனும், தருமஞ்செய்யாதவனுமாகிய அடியேனுக்கு, சிவஞானமயமாகிய தேவரீரது இளமையாகிய பாததாமரைகள் இரண்டையும் அடியேனை விரும்பிக்கொடுத்து தேவரீரது திருவுளம் அன்பு செய்யாதோ?

விரிவுரை.

"கோடியனை . . . . மண்பிலண்டுஞ்சகனா."

இம் மூன்றடிகளும் மதனனூலின் செயல்களை யுரைக்கின்றன. செஞ்சேய என்பது கடைகுறைந்து செஞ்சேயென்றாயிற்று.

"செந்திலென் றவிழ்வுள முருகிவரு மன்பிலன்"—

ஆறுமுகப்பெருமான் அடியார்பொருட்டு திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய திருத்தலங்களுள் திருச்செந்தூர் தலையாக விளங்குவது. கடற்கரையில் காட்சிக்கினியதாய்க் காண்பார் கண்களையுங் கருத்தையும் ஒருங்கே கவருங் கவினுடையது. குமாரக் கடவுள் சூராதியவுணரைக் கொன்றருளுவான் இலக்கத்தொன்பான் வீரர்களுடன் வந்து தங்கி, வீரவாகுதேவரைத் தூதனுப்பி, தேவர் குழாம் சூழ வீற்றிருந்தருளிய மேன்மையுடையது. பாண்டியன் மகளாகிய அங்கசுந்தரிக் குதிரைமுகத்தை மாற்றி மனித முகத்தை நல்கிய மகிமையுடையது. குமரகுருபரருடைய ஊமைத் தன்மையைத் தவிர்த்து தெய்வவாக்கை வழங்கி அவரால் கந்தர் கலிவெண்பாவாற் றுதிக்கப்பெற்றது. இத்தகைய பற்பல அற்புதங்களையுடைய இத்திருத்தலத்தின் திருநாமத்தைக் கூறியவுடனே அத்தலத்தின் பெருமைகளும், அத்தலத்தில் எழுந்தருளிய ஆண்டவனது அருட்குணங்களும் நினைவுக்கு வர, அதனால் மனங்குழைந்து உருக வேண்டும். நெஞ்சக்கனகல்லு நெகிழ்ந்துருகி வழிபடுவார்க்கே பிறவிநோய் நீங்கி என்று மழியா இன்பம் எளிதிற்கிடைக்கும்.

"உருகுமடியவர் இருவினை யிருள்போரும்
உதய தினகர இமகான் வலம்வரும்
உலக முழுதொரு நொடியினில் வலம்வரு
பெருமாளே"

"பஞ்சாயுதக்கடவுள் மருகன்மறவாதவர்நினைப்பவைமுடிக
குமவன்
உருகுமடியா ரிருவினைததொகை யறுக்குமவன்"

—வகுப்பு:

தந்திலன்:—

சாத்திர ஆராய்ச்சியில்லாதவன் என்று பொருள் கூறுவாருமுளர். தந்திலன்:— தந்து = நூல். அறிவை விசாலப்படுத்தி அஞ்ஞானத்தை நீக்குவது அறிவுநூல்களேயாம் அவ்வறிவுநூல்களா

வன : சிவஞானபோதம், சிவஞான சித்தியார்முதலிய பதினான்கு சித்தாந்த சாத்திரங்களும், தேவார திருவாசக திருப்புகழாதி பன்னிரண்டு திருமுறைகளேயாம். மனிதனுகத் தோன்றிய ஒவ்வொருவரும் இவற்றை வாங்கி பூசைப்பெட்டகத்தில் வைத்து மலரிட்டுப்பூசித்து அன்புடன் ஓதுதல்வேண்டும்.

" அறிவுநூல் கல்லாமூடா "

—அருணகிரியார்,

" சாத்திரங்களாயோர் "

—திருவெண்காடர்,

" படமிலகு மரவினுடல் . . . . உதறுமொரு கலபியிமை": —

மயில் பாம்பை யெடுத்து இரண்டாகக் கிழித்து உதறுகிறது என்பதன் தத்துவம், பாம்பு என்பது வினை; மயில் என்பது விந்து; பாம்பு எவ்வாறு ஒருவனை ஓடிவந்து தீண்டுமோ அவ்வாறு வினை அதனைச் செய்தானை எத்தேயத்தும் எக்காலத்தும் எந்நிலையிலும் தொடர்ந்து வந்து தீண்டும். ஆயிரம் பசுக்களின் நடுவில் ஓர் இளங் கன்றை விட்டுவிட்டால் தாய்ப்பசுவை அக்கன்று எவ்வாறு தேடி யடையுமோ ? அவ்வாறே தொல்லைப் பழவினையும் தன்னைச்செய்த ஒருவனை யடையும் இதனை நாலடியார் கூறுமாறுகாண்க.

பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.

மற்றொன்று சூழினும் தான் முந்துறும் பெருவலியுடையது ஊழ்வினை, அது இருகூறுயுளது : நல்வினை தீவினை என. அதனை யடக்கியாளும் பெருவலியுடையது விந்து தத்துவம்.

வாளெயிற துற்றபகு வாய்தோறு நெருப்புமிழும்
வாசுகி எடுத்துதறும் வாசிக்காரனும்

—வகுப்பு.

" பகையசுரா . . . . சிந்தும்வேலா "

வேல் என்பது சிவஞானம்; அசுரர் என்பதில், சூரன்—ஆணவம், சிங்கமுகன் - மாயை, தாரகன் - கன்மம், என்ற மூவசுரர்களே மும்மலங்கள் ; ஏனைய அசுரர்கள் காமம் குரோதம் முதலியவைகளாம். இவைகளையழிக்கவல்லது சிவஞானம் ஒன்றேயாம். அச்சிவஞான

மாகிய வேற்படையை யுடையவர் முருகக்கடவுள் ஒருவரேயாம். அதனாலன்றோ அப்பெருமானை "ஞானபண்டித ஸ்வாமீ நமோ நம" என்றார் நம் பரமாசிரியர்.

"இச்சா ஞானக்ரியாசக்தி ரூபசக்தி தரம்பஜே"
—குமாரதந்திரம்.

எண்குணன் :—

சிவபெருமானுக்கு எட்டு அருட்குணங்களுள. அவையாவன: தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை.

"தன்வயத்தனன் தூயவுடம்பினன்
தானியற்கை யுணர்வின னாகுதல்
பன்னுமுற்று முணர்த லியல்பினை
பாசநீங்குதல் பேரருளாகுதல்
மன்னுமிற்றில வாற்றலுடைமையும்
வரம்பிலின்பமுமாகிய வெண்குணம்"

இவற்றை வடநூலார்

"ஸாவஜ்ஞதா த்ருப்தி ரநாதிபோத ஸ்வதந்த்ரதா நித்யமலுப்த சக்தி:| அநந்த சக்திஸ் சநிராமயாத்மா விசுத்ததேஹஸ்சசிவத்வ [மேதி"

என்பர்.

பழைய இறை :—

சிவபெருமான் ஆதியில்லாத அநாதி பரம்பொருள், "ஆதிமந்த்யாந்த விஹீநமேகம் விபும்" எனத் தெரிவிக்கிறது பஞ்சருத்ரோபநிஷத்துக்களில் ஒன்றாய யஜுர்வேத கைவல்யம். இதனைத் தமிழ் வேதம் "ஆதியுமந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி" என விளக்குகிறது. "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருள்" என்றதையும் "அநாதியா யைந்தொழிற்கும் அப்புறமா யன்றே
யநாதிகட் கெட்டா வடிவாய"
என்றதையும் உய்த்துணர்க.

உருவமிலி :—

தனக்கென ஓர் உருவமுமில்லாதவர்; ஆன்மாக்களுக்காக உருவத்தையடைகின்றனர்.

" ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலாற் காயிரமாந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ "

—மணிவாசகனார்.

உருவமில்லாத முழுமுதற்கடவுள் ஆன்மகோடிகளை யுய்விக்கும் பேரருட் பெருக்கால் ஆன்மாக்கள் எந்த எந்தவகையாகச் சிந்திக்கின்றார்களோ அந்த அந்த உருவத்தை யடைகின்றனர் "சிந்தாமணிக்கு ஒரு நிறமுமில்லை, அதனருகில் எந்த எந்த நிறப்பொருளுளவோ அந்த அந்த நிறத்தை யடைகிறது. அதுபோல் எந்த எந்த ரூபமாகச் சாதகன் நினைக்கின்றானோ அந்த சமயம் அவனுக்கு அந்த அந்த ரூபத்தைச் சிந்தாமணியைப்போல் சிவபெருமான் அடைகிறார்" என்னும் பொருள்தரும் பிரபல பிரமாணத்தைக் காண்க.

யேந யேந ஹி ரூபேண ஸாதகஸ்ஸம் ஸ்மரேத்ததா
தஸ்ய தந்மயதாம்யாதி சிந்தாமணி ரிவேஸ்வர:

—சாவசுரோத சாரசங்கிரகம்.

" ஆரொருவருள்குவா ருள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும் "

—அப்பர் தமிழ்வேதம்.

இக்கருத்தை நம் காரைக்காலம்மையார் விளக்குமாறு நோக்க.

நூலறிவுபேசி நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்றா னீர்மையே—மேலுலகத்
தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே யாம்.

அன்பாபங்கன் :—

சிவமூர்த்தி, தமது திருவடியை வழிபடும் அன்பர்க்கு துணையாக இருந்து அருள்புரிகின்றார் என்பதனை

" பாண்டியன்முன் சொல்லிவந்த பாணன் பொருட்டடிமை
வேண்டி விறகெடுத்து விற்றனையே—ஆண்டொருநாள்
வாய்முடியாத் துன்புகொண்ட வந்திக்கோ ராளாகித்
தூய்முடிமேல் மண்ணுஞ் சுமந்தனையே—ஆய்துயர
மாவகஞ்சோ மாணிக்க வாசகருக்காய் குதிரைச்
சேவகன்போல் வீதிதனிற் சென்றனையே—மாவிசையன்
வில்லடிக்கு நெஞ்சம் விரும்பியதல் லாலொருவன்

கல்லடிபட்டு முள்ளங் களித்தனையே—மல்லலுறும்
வில்லடிக்கோ பதித்த மெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனைச் செய்தனையே—சொல்லகலின்
ஏறுகின்ற கேடபருந்த கேலேலியை மூவுலகும்
ஆறுகின்ற மன்னவனு யாக்கினையே—கோளகல
வாடச்சங்கு நூலிழைத்த வாயசிலம்பி தன்னையுயர்
கோச்செங்க சோழனெனக் கொண்டனையே-எச்சறுநல்
ஆறுத்த வாக்கசாக காம்பசியைக் கண்டுகட்டுச்
சோறெடுத்துப் பின்னே தொடர்ந்தனையே—கூறுகின்ற
தொண்டைபெறுஞ் சுந்தரர்க்குத் தோழனென்று பெண்பரவை
நண்மனைக்குத் தூது நடந்தனையே"

— *திருவருட்பிரகாசவள்ளல்,*

மதியினைத்துறைசெய் துண்டமும் —

சந்திரனைத் தரித்த வரலாற்றைத் திருப்புகழமிர்தம், 1-*வது மலர்* 9-*வது பக்கத்திற் காண்க*

தமிழ்விரக :—

முருகப்பெருமான் ஏனைய மொழிகளுக்குப் பொதுக்கடவுளாகவும், தமிழ்மொழிக்குச் சிறப்புக் கடவுளாகவும் விளங்குகின்றனர். மதுரையில் நாற்பத்தொன்பது புலவர்களுடன் தாமுமொருவரா யிருந்து தமிழாராய்ந்ததும், அகத்தியருக்குத் தமிழைப்போதித்ததும், நக்கீரருக்கும் அருணகிரிநாதருக்கும் தமிழால் அடியெடுத்துக் கொடுத்ததும், இதனை விளக்கும். "செந்தில்வாழ் செந்தமிழ்ப்பெருமாளே" என்ற திருப்புகழாலுந் தெளிக. திருப்புகழ் தமிழ் வேதத்தை முருகப்பெருமான் மனமகிழ்ந்து தரித்துக்கொள்ளுகின்றார்.

"விரித்தருணை கிரிநாத னுரைத்ததமி ழெனுமாலை
மிகுத்தபல முடனேந்தி மகிழ்வோனே"

தெய்வயானையம்மையாரது இனிய கலவியின்பத்திலும் நக்கீரர் தேவர் பாடிய திருமுருகாற்றுப்படையென்னும் செந்தமிழ்ப்பிரபந்தத்தில் மிகவும் பிரியமுடையவராயிருக்கின்றனரென அருணகிரியார் கந்தரந்தாதியில் உரைக்குமாறு காண்க.

"கைமா மயில் செவ்வி நற்கீரர் சொற்றித்தித்ததே'

முருகவேள் செந்தமிழ்ப்பிரியர் என்பதனை "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" என்ற கந்தரலங்காரத் திருவிருத்தம் உணர்த்துவதையுங் காண்க.

" தண்டரள மணிமார்ப செம்பொனெழில் செறிரூப
தண்டமிழின் மிகுநேய முருகேசா "

—(அண்டாபதி) திருப்புகழ்

கருத்துரை.

மயில்மிசை எழுந்தருளிவந்து அசுரரை சம்மரித்த வேலாயுதரே! சிவபெருமானது இடப்புறத்திலிருக்கும் உமாதேவியார் திருமுலைப்பால் தந்து அன்புகொள்ளும் தமிழ்விரக! பெரிய பொருளே! சங்கரன் கும்பிடும் தம்பிரானே! பொதுமகளிரது மாயா வலையிற் சிக்கி, அவரது இன்பத்தையே பரமசுகமெனக்கருதி அறிவில் நெறியில் சென்று திருச்செந்தூர் என்று உருகாத அடியேனுக்கு தேவரீரது சீரடிக்கமலத்தைத் தந்தருளத் தமது திருவுளம் சிந்தியாதோ?

உண்மையின் உயர்வு.

உண்மையுரைப்பவன் இம்மையிற் பொருளையும் புகழையும், மறுமையில் புண்ணியலோகத்தையும் அடைவான். கடவுள் சத்தியவடிவாக இருக்கிறார். சத்தியத்தின் மேலான தருமமும், அசத்தியத்தின் மேலான பாவமுமில்லை. பொய்கூறியவன் எழுபிறப்பிலீட்டிய எல்லா புண்ணியத்தையுங் கெடுத்தவனாவான். பிரமவதையும், சிசுவதையும், தந்தைவதையும் செய்தவனாவான். ரௌரவ முதலிய கொடிய நரகங்களையடைவான். பின்னும் ஊர்ப்பன்றி, கழுதை, நாய், நீர்க்காக்கை, புழு என்னும் இப்பிறப்பிற் பிறந்து, பின்பு மானுடப்பிறவியிலே, பிறவிக்குருடன், செவிடன், ஊமை, குட்டநோயினன், இவர்களாகியும், மிக்க பசிதாகமுடையவனாகித் தனது பகைவன் வீட்டில் தன்மனையாளோடும் பிச்சை யிரப்பவனாகியும் பிறப்பான். உண்மையுரைத்தவன் எக்காலத்தும் பொன்றாத இன்பத்தையடைவான். உண்மையே மனத்திற்குச் சாந்தியைத் தரும். உண்மையே மனிதனை உயர்த்தும்.

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(205-ம் பக்கத் தொடர்ச்சி.)

कृतान्तस्य दूतेषु चण्डेषु कोपा
द्दहच्छिन्धि भिन्धीति मां तर्जयत्सु ।
मयूरं समारुह्य मा भीरिति त्वं
पुरःशक्ति पाणिर्ममायाहि शीघ्रम् ॥

(21) க்ருதாந்தஸ்ய தூ3தேஷு சண்3டேஷு கோபாத்
த3ஹச்சி2ந்தி4 பி4ந்தீ4தி மாம் தர்ஜயத்ஸு ।
மயூரம் ஸமாருஹ்ய மாபீ4 ரிதித்வம்
புர: சக்தி பாணிர் மமாயாஹி சீக்4ரம் ॥

பதவுரை.

ஹே தயாளோ! - ஓ தயாளுவே!
சண்டேஷு க்ருதாந்தஸ்ய தூதேஷு - கொடியவர்களான யமனுடைய தூதர்கள்,
கோபாத் - கோபத்தினால்,
தஹ, சிந்தி, பிந்தி, இதிமாம் தர்ஜயத்ஸு - கொளுத்து, வெட்டு, குத்து என்று என்னை பயமுறுத்தும்போது,
த்வம் - தேவரீர்,
மயூரம் ஸமாருஹ்ய - மயிலின்மீதேறிக்கொண்டு,
சக்திபாணி - வேலாயுதத்தைத் தாங்கின திருக்கரத்தையுடையவராய்,
சீக்ரம் - விரைவில்,
மாபீ: இதி - பயப்படாதே என்று,
மமபுர: ஆயாஹி - எனது எதிரில் எழுந்தருளவேண்டும்.

பொழிப்புரை.

ஓ கருணாமூர்த்தியே! மரணகாலத்தில் கொடியவர்களான யமதூதர்கள் வெட்டு குத்து கொளுத்து என்றிவ்வாறு என்னை நோக்கிப் பயமுறுத்தும்போது தேவரீர் திருக்கரத்தில் வேலாயுதத்தைத் தாங்கிக்கொண்டு விரைவில் மயூராரூடராய் அடியேன்முன் எழுந்தருளி அபயந்தந்து ஆதரிக்கவேண்டும்.

प्रणम्यासकृत्पादयोस्ते पतित्वा
प्रसाद्य प्रभो प्रार्थयेऽनेक वारम् ।
नवक्तुं क्षमोऽहम् तदानीं कृपाब्धे
नकार्यान्त कालेमनागप्युपेक्षा ॥

(22) ப்ரணம்யாஸக்ருத் பாத³யோஸ்தே பதித்வா
ப்ரஸாத்³ய ப்ரபோ⁴ ப்ரார்த்²யேநேகவாரம் |
நவக்தும் க்ஷமோஹம் த³தானீம் க்ருபாப்³தே⁴
நகார்யாந்த காலே மனாக³ப்யுபேக்ஷா.

பதவுரை.

ஹேப்ரபோ! க்ருபாப்தே! - ஓ பிரபுவே! கருணைக்கடலே!
த்வாம் - தேவரீர்
அஸக்ருத் - பலதடவை,
ப்ரணம்ய - நமஸ்கரித்து,
தேபாதயோ: - தேவரீரது திருவடித்தாமரைகளில்,
பதித்வா ப்ரஸாத்ய - வீழ்ந்து சந்தோஷப்படுத்தி,
அநேகவாரம் - பலதரம்,
ப்ரார்த்தயே - கேட்டுக்கொள்ளுகிறேன்,
ததானீம் - அப்போது,
அஹம் - நான்,
வக்தும் - பேசுவதற்கு,
நக்ஷம: - சக்தியற்றவனாயிருப்பேன்,
அத: - ஆகையினால்,
அந்தகாலே - எனது மரணதருவாயில்,
மனாக் அபி - சிறிதுகூட,
உபேக்ஷா - உபேக்ஷையானது,
நகார்யா - செய்யலாகாது,

பொழிப்புரை.

கருணை நிறைந்த பிரபுவே! நான் மாதாக்கருவாயில் தேவரீரைப் பிரார்த்திக்கச் சக்தியற்றிருப்பேனாகையால் அக்காலத்தில் என்னை விட்டுவிடலாகாதென்று இப்போதே தேவரீரைப் பலதரம் வணங்கி மகிழ்வித்துப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறேன்.

20, 21, 22 இம்மூன்று ச்லோகங்களினால் ஒருதரமேனும் தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று முருகக்கடவுளிடம் பிரார்த்தித்த அன்பன் கடல்போல விசாலமான கருணையையுடைய அக்கடவுளால் எக்காலத்திலும் காப்பாற்றப்படுவான் என்பது தெரிவிக்கப்பட்டது.

सहस्राण्डभोक्ता त्वया शूरनामा
हतस्तारकःसिंहवक्त्रश्चदैत्यः।
ममान्तर्हृदिस्थं मनःक्लेशमेकं
नहंसिप्रभोकिं करोमिकयामि ॥

(23) ஸஹஸ்ராண்ட[3] போக்தா[4] த்வயா சூரநாமா
ஹ[4]தஸ்தாரக: ஸிம்ஹ வக்த்ரஸ்ச தைத்ய:[3] |
மமாந்தர்ஹ்ருதிஸ்[2]தம் மன: க்லேசமேகம்
நஹம்ஸிப்ரபோ! கிமகரோமி க்வயாமி ||

பதவுரை.

ஹே ப்ரபோ! - ஓ பிரபுவே!
த்வயா - தேவரீரால்,
ஸஹஸ்ராண்ட போக்தா சூரநாமா தைத்ய: - ஆயிரம் அண்டங்களை அடக்கியாண்டுவந்த சூரபத்மா என்கிற அசுரனும்,
(ததா) தாரக: ஸிம்ஹ வக்த்ர: ச ஹத: - தாரகன் சிம்ஹவக்த்ரன் என்னும் அசுரர்களும் கொல்லப்பட்டார்கள்,
(கிந்து) மம அந்தர் ஹ்ருதிஸ்தம் ஏகம் மன: க்லேசம் ந ஹம்ஸி -- ஆனால் எனது ஹ்ருதயத்திற்குள்ளிருக்கும் ஒரே ஒரு மனக்கிலேசத்தைமட்டும் கொல்லாமலிருக்கிறீர்,
அஹம் - நானோ,
கிம் கரோமி க்வயாமி? - என்ன செய்வேன்? எங்கு செல்வேன்,

உ

ஸ்ரீ வள்ளிநாயகன் துணை

கந்தர் திருவிளையாடல்

(192 வது பக்கத் தொடர்ச்சி)

உலகம் உய்யும்பொருட்டு அருளுருவங்கொண்டு சரவண தடாகத்தில் திருவவதாரஞ்செய்தருளிய முருகப்பெருமான் கைக்குழந்தைபோலச் செய்யும் திருவிளையாடலைக்கண்டு, அரியயனாதி யமரர்கள் அனைவரும் கார்த்திகை மகளிர்களை நோக்கி, "சரவணப் பொய்கையில் சண்முகக்கடவுளாய் வீற்றிருந்தருளும் எம்பெருமான் ஒரு குழந்தைபோலத் தோன்றினார். நீங்கள் அவருக்கு நாள்தோறும் உங்கள் முலைப்பாலைக்கொடுத்து வளர்க்கக்கடவீர்கள்" என்றார்கள். கார்த்திகைப்பெண்கள் அதற்கிசைந்து, சரவணப்பொய்கையில் எழுந்தருளியிருக்கும் இளம்பூரணனையடைந்து போற்ற, அறுமுகக்கடவுள் தம்மை வேண்டுவோர் வேண்டிய பொருள்களை வெறாதுதவு பெருமான் ஆதலால், அவ்வாறு மாதர்களும் அன்போடு பால்தரும் அன்பால் எடுக்க ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஆறு குழந்தையாகப் பிரிந்தருளினார்.

"உவகையொடு கிர்த்திகைய ராறுவருமெடுக்க அவர்
ஒருவ ரொருவர்க் கவனோ ரோர்புத்ர னானவனும்"

—வகுப்பு.

பொழிப்புரை.

ஓ பிரபுவே! அநேக அண்டங்களை யடக்கியாண்டுக்கொண்டு உலகத்தை துன்புறுத்திவந்த சூரபத்மன் தாரகன் சிங்கமுகன் முதலிய அசுரர்களைத் தேவரீர் சிரமமில்லாமல் கொன்றுவிட்டீர். ஆனால் எனது உள்ளத்திலிருந்துகொண்டிருக்கும் மனக்கிலேசத்தை மாத்திரம் ஒழிக்கின்றீரில்லை. நான் எதைச் செய்வேன் எங்கே செல்லுவேன்

இதனால் முருகக்கடவுளின் அருளால் அடியவர்கள் எக்காலத்தும் சந்தோஷமுள்ளவர்களா யிருப்பார்கள் என்பது தெரிவிக்கப்பட்டது.

அங்ஙனம் பிரிந்த ஆறு திருக்குழந்தைகளையும் கார்த்திகை மகளிர்கள் மிகவும் மகிழ்ந்து எடுத்துத் தங்கள் தங்கள் முலைப்பாலை ஊட்ட, முருகப்பெருமான் திருமுறுவல் செய்து, நீங்காத பேரருளால் அருந்துவார்போல அருந்தினார். பாலருந்திய பரஞ்சுடர் முதல்வனை அக்கார்த்திகைப்பெண்கள் வண்டருந்தாத கஞ்சமாமலர்ச் சயனத்தில் சேர்த்துத் தாலாட்டிக் கண்வளரச் செய்துத் துதித்தார்கள். குமாரக்கடவுள் திருவருளினாலே துயில்செய்ய ஒருருவமும், துயில் செய்துத் துணிந்தெழுந்து மழலைமொழிபேச ஒருருவமும், மாதாவின் முலைப்பாலைச் செப்பவள வாய்வைத்து உண்ண ஒருருவமும், நகைசெய்துக் கொண்டிருக்க ஒருருவமும், விளையாடிக்கொண்டிருக்க ஒருருவமும், காரணமின்றியே அழுதுகொண்டிருக்க ஒருருவமும், உடையாராயினார். தவழ ஒருருவமும், தளர்நடையிட்டுச் செல்ல ஒருருவமும், நில்லாது விரைந்து எழுந்துவிழ ஒருருவமும், இருக்க ஒருருவமும், அச்சரவணத் தடாகமுழுதும் கலக்க ஒருருவமும், தாயாரிடத்தில் இருக்க ஒருருவமும் உடையாராயினார். கூத்தாட ஒருருவமும், செங்கைகொட்ட ஒருருவமும், இனிய பாடல்களைப்பாட ஒருருவமும், அவ்விடத்தைப்பார்க்க ஒருருவமும், ஓடவோருருவமும், ஓரிடத்தில் ஒளிக்க ஒருருவமும், அப்படி ஒளித்த மகவைத் தேட வோருருவமுமாக உடையாராயினார்.

ஆடவோ ருருவஞ் செங்கை யறையவோ ருருவ நின்று
பாடவோ ருருவ நாடிப் பார்க்கவோ ருருவ மாங்க
ணோடவோ ருருவ மோர்பா லொளிக்கவோ ருருவம் யாண்டுந்
தேடவோ ருருவ மாகச் சிவன் மகன் புரித லுற்றன்

இவ்வாறு ஆறுதிருமேனியும் ஒருகணத்திற்குள் ஆயிரக்கணக்கான பேதமாம் வண்ணம் முழுமுதற்கடவுளாகிய முருகப்பெருமான் உயிர்கள்தோறு மாடல்போல் எண்ணிலாத அற்புதத் திருவிளையாடல்களைப் புரிவாராயினார். சிறுபாலனாகிவந்த செவ்வேளது திருவிளையாடலின் பலபல திறமும் நோக்கிய நாரணனும் நான்முகனும் இந்திரனும் இருடிகளும் பிறரும் அற்புதமும் ஆனந்தமும் அடைந்து, இவ்வொருபாலரே பல சிறுவர் வடிவங்கொண்டு நம்முன் கணப்பொழுதிற்குள் எண்ணிலாத பேதத்தராயினார். இதனை ஆராயுங்கால் இக்குமாரசுவாமியுடைய திருவிளையாடல் எங்களாலும் அறிவறியது. கைக்குழந்தைபோலத் தோன்றிய இவர் செய்யும் இம்மாயைபோல ஒருவரும் செய்ய வல்லவரல்லர். பிறிது சொல்லி என்ன பயன்?

நாமும் இவ்வாறு செய்ததொன்றில்லை. இவர் உயர் வொப்பில்லா சிவபெருமானேயாம்" என்று சொல்லி வணங்கினார்கள்.

கார்த்திகைப்பெண்கள் அறுவரும் அறுமுகக்கடவுளின் ஆடல்களை நோக்கி மிக்க வியப்புற்று, குழந்தையென்ற எண்ணத்தை ஒழித்து, சிறிதும் பிறபாது அஞ்சி, வழிபடுகடவுளாகவேகொண்டு மெய்யன்போடு துதித்தார்கள்.

நவவீரருற்பவம்.

ஆலமுண்ட அரனாரது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய அக்கினிப்பொறிகளின் வெம்மையைத் தாங்காது, உமாதேவியார் தமது திருவடிகளிலுள்ள சிலம்புகள் தாக்கலால் நவரத்தினங்கள் சிதறும்வண்ணம் அஞ்சியோடினார். "மாலயனாதிவானவர்கள் சிவபெருமானை வணங்கி, "நீர் ஒரு திருக்குமாரனைத் தந்தருளும்" என்று வேண்ட, சிவபெருமான் தமது நுதல்விழியினின்று தீப்பொறிகளைத் தோற்றுவித்து, ஒரு குமாரனாய் வளரும்வண்ணம் சரவணப் பொய்கையிலே சேர்ப்பித்தருளினார்" என்றுணர்ந்தார். அதன்பின் "அரனாருக்குக் குமாரன் என்னிடத்தே தோன்றாவண்ணம் திருமால் பிரமன் இந்திரன் முதலிய இமையவர்களுடைய பன்னியர்களுக்கெல்லாம் புதல்வர்கள் இல்லாதொழிக" என்றார். மீண்டு சிவசந்நிதியை யடைந்து, "தமது நெற்றிக்கண்ணில் தோன்றிய நெருப்புப்பொறிகளின் வெம்மையைக்கண்டு உடல் வெதும்பி ஓடினேன்; நீர் அவற்றை இவ்விடத்தினின்றும் அகற்றினமையால் மீண்டேன்" என்று விண்ணப்பஞ்செய்ய, கண்ணுதற்கடவுள் கருணைசெய்து, தேவியாரைத் தமபக்கத்திருத்தியருளினார்.

உமாதேவியார் முன் ஓடியபொழுது, அவருடைய பாதச்சிலம்பினுஞ் சிதறிய இரத்தினங்களெல்லாம் சிவமூர்த்தியின் திருமுன் விளங்கின. அரனாரது ஆணையினால், அந்நவமணிகளினின்றும் அம்பிகையின் திருவுருவந்தோன்றியது. அவ்வுருவங்களைச் சிவபெருமான் நோக்கி, திருவருளினால் "வாருங்கள்" என்று திருவாய்மலர்ந்தருள, ஒவ்வோர் இரத்தினத்துக்கு ஒவ்வோர் சத்தியாக நவசத்திகள் தோன்றினார்கள். அவர்கள் முக்கண்மூர்த்தியின் மூளரியந்தாளை வணங்கிநின்று அவரிடத்தே விருப்பம் வைத்தமையால், இருடி பத்தினிகள்போல் விரைவிலே கருப்பமுற்றார்கள். இவை யாவையும் பார்வதியம்மையார் கண்டு, அந்நவசக்திகளின்மீது சினந்து "நீங்கள்

நடந்து பாருயினமையால், இக்கருப்பத்துடன் பலகாலம் இருக்கக் கடவீர்கள்' என்று சபித்தனர். அப்பொழுது நவசக்திகள் அஞ்சி நடுநடுங்கி உடல் வெயர்த்தனர். அவ்வெயர்வையினின்றும், தேவ தேவனது திருவருளால் தினகரகோடிகள் போல் இலட்சம் வீரர்கள் உதித்தார்கள். அவ்வீரர்கள் இடிபோன்ற சொல்லையுடையவர் களும், பொன்னுடையை உடுத்தவர்களும், வாளையும் பரிசையையும் கரத்திலேந்தியவர்களுமாய்க் கண்ணுதற்கடவுள் முன் சென்று, திரு வடிகளை இறைஞ்சித் துதித்து நின்றார்கள். எம்பெருமான் அவர்களை நோக்கி, "மைந்தர்களே! கேண்மின்; அமரர்களுக்குப் பகைவர் களாகிய அவுணர்களை யழித்தற்பொருட்டு நமதுபுதல்வனாகிய முருக வேளுக்கு நீங்கள் யாவரும் படைகளாகக் கடவீர்கள்" என்று கூறியருளினார். அவ்விலக்க வீரர்களும் நாடோறும் பேரன்புடை யவர்களாய் சிவசந்நிதியை அகலாது. திருத்தொண்டின்வழி நின் றார்கள்.

பார்வதியாரால் சபிக்கப்பட்ட நவசக்திகள் நடுநடுங்கி, மலை வளர்காதலியை மனமொழி மெய் காரணங்களால் வழிபாடுசெய்து கொண்டு, கருப்பத்தோடு பலகாலம் இருந்தார்கள். அந்நவசக்திக ளுடைய கருவினுள்ளே நந்திகணத்தவர்கள் குழவிகளாய்ப்புகுந்து, காளையர்களாகி, சிவபெருமானைச் சிந்தித்துத் தொழுதுகொண்டிருந் தார்கள். அவர்கள் இங்ஙனம் சிவயோகஞ் செய்துகொண்டிருத்த லால், கருப்பம் மிகப்பாரமாதலும்; நவசக்திகள் பார்வதி பரமேசு வரைப் பணிந்து "அடியேங்கள் இந்நாள்காறும் இக்கருப்பத்தினால் வருந்தினேம்; இனித்தாங்கலாற்றேம் திருவுளமிரங்கியருளல்வேண் டும்" என்று குறையிரந்தனர்கள். தழல்விழிப்பரமன் தண்ணருள்புரிந்து மலைமகளது மலர்முகத்தை நோக்கி, "ஏலவார் குழலியே! நின்காற் சிலம்பினின்றும் உதித்த இந்நவசக்திகள், நின சாபங்காரணமாக நெடுங்காலம் கருப்பத்தைச் சுமந்து மிகுந்த துன்புற்றார்கள்; இனிப் புதல்வரைப்பெறத் திருவருள் செய்க" என்று பணித்தருளினார். அம்பிகை "நன்று" என்று அதற்கிசைந்து, புன்முறுவல்பூத்து நவசக்திகளை நோக்கி, "இனி நீங்கள் ஆற்றலிற் சிறந்த அரும்புதல்வர் களைப் பெறக்கடவீர்கள்" என்று திருவாய்மலர்ந்தருள, அவர்கள் வயிற்றினுள் யோகஞ் செய்துகொண்டிருக்கும் வீரர்கள் அதனை யறிந்து, யோகத்தைவிடுத்து மனமகிழ்ந்து, கறைமிடற்றண்ணலா ரது கருணையைநினைந்து தொழுது, பிறக்கும்பொருட்டு நினைந்தார்கள்.

நவசக்திகள் ஞானாம்பிகையின் கருணைநிறைந்த திருமொழியைக்கேட்டலும், கவலை நீங்கி, அம்மையாரையும் அரனாரையும் வணங்கி வாழ்த்தி, விடைபெற்றுக்கொண்டு அங்குநின்று நீங்கி, ஓரிடத்திற்சென்று புதல்வரைப்பெற்றார்கள். மாணிக்கவல்லியிடத்து திறமிக்க வீரவாகுதேவரும், மௌத்திகவல்லியிடத்து வீரகேசரியும், புட்பராகவல்லியிடத்து வீரமகேந்திரரும், கோமேதகவல்லியிடத்து வீரமகேச்சுரரும், வைடூரியவல்லியிடத்து வீரபுரந்தரரும், வைரவல்லியிடத்து வீரராக்கதரும், மரகதவல்லியிடத்து வீரமார்த்தாண்டரும், பவளவல்லியிடத்து வீராந்தகரும், இந்திரநீலவல்லியிடத்து வீரதீரரும் அவதரித்தார்கள். இந்த வீரர்கள் ஒன்பதின்மரும், சிவபெருமானுடைய திருவருளினாலே, தங்கள் தங்கள் அன்னையர்களது நிறத்தையுடையவர்களாய், பொன்னுடையுடுத்தவர்களாய், பல்கால் வளர்ந்த உறுப்புகளோடும், நவசக்திகளுடைய உந்தியின்வழியே நான்முகக்கடவுளைப்போல் உதித்தார்கள். இவ்வாறு உதித்த வீரர்கள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி எழுதலும், சிவமூர்த்தி அம்பிகையை நோக்கி, "புவனேஸ்வரி! மைந்தர்களாகிய இவர்கள் மிகுந்த அறிவுடையவர்கள், ஆற்றலுடையவர்கள்; மானமாகிய அருங்கலமுடையவர்கள், இவர்கள் புதியர்களல்லர்; நந்திகணத்தவர்கள்" என்று சொல்லியருளினார். தேவியார் அதுகேட்டு அம்மைந்தர்களுக்குத் திருவருள்புரிந்தார். சிவபெருமான் அவர்கள் எல்லாருக்கும் தனித்தனி வாள்கொடுத்து, இலக்க மைந்தர்களோடு நீங்களுங்கூடி, உங்களுக்குத் தலைவனாகிய அறுமுகக்கடவுளை நீங்காது அவன் பணித்த தொண்டுகளைச் செய்துகொண்டிருக்கக் கடவீர்கள்" என்று அருளிச்செய்ய அவர்களும் அதற்கிசைந்து வணங்கினார்கள். இவ்வொன்பது வீரர்களும் இலக்க வீரர்களோடு கலந்து எம்பெருமானுடைய திருக்கோயிலை அகலாது, அங்கிருந்தார்கள். சத்திகளொன்பதின்மரும் உமாதேவியாரை நீங்காது, அவர் பணித்த தொண்டுகளைச் செய்துகொண்டிருந்தார்கள்.

(தொடரும்.)

உ

ஓம் குஹாய நம:

கற்பு

(217-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்புடை மனைவியால் கணவனுக்கு ஆயுள், செல்வம், புகழ், அழகு, வெற்றி, இன்பம், கல்விமுதலியவைகள் தானே வந்தடையும்.

பற்பல நெறிகளும் பயிலு நூல்களா
லற்பய னடைதலுந் தேசு நாடொறும்
பொற்புடை வெற்றியும் புகழு மின்பமுங்
கற்புடை மனைவியாற் கணவற் கெய்துமே,

—மகாபாரதம்.

இதற்கு எடுத்துக்காட்டாக இன்றும் என்றும் எங்கும் நின்று நிலவும் புண்ணிய சரித்திரத்தை விளக்குதும்.

சாவித்திரி.

நீர்வளம் நிறைந்த மத்திரதேசத்தில் உத்தமகுணம் பொருந்திய அச்சுவபதி என்ற ஓர் அரசன் இருந்தான். அவன் அறநெறி வழுவாதவன்; விளையாட்டிற்கும் பொய் சொல்லாதவன்; தருமசீலன்; தெய்வபக்தியுள்ளவன்; போரிற் புறங்காட்டாதவன்; இந்திரியங்களை வென்றவன்; நாட்டு ஜனங்களுக்கும் நகர ஜனங்களுக்கும் பிரியமானவன்; எல்லாவுயிர்களுக்கும் இதத்தைச் செய்பவன்; பொறுமையுள்ளவன். இத்தகைய மன்னன் குழந்தைகளில்லாமல் வருந்தினன். வயது தளர்ந்தவனாதலால் புதல்வனை விரும்பி மிகவும் மனம் வருந்தி கடுமையான நியமத்தை மேற்கொண்டான். பகலை எட்டாகப் பகுத்து அதன் ஆறாவது காலத்தில் குறைந்த உணவையுண்டு கொண்டும், பிரமசரிய விரதமுடனும், மனத்தையடக்கியும், சாவித்திரி மந்திரத்தால் லக்ஷம் ஆகுதி செய்துகொண்டிருந்தான். இந்த நியமத்துடன் பதினெட்டு ஆண்டுகள் இருந்தான். பதினெட்டாவது ஆண்டு நிறைந்தவுடன் சாவித்திரிதேவி உள்ளமகிழ்ந்து, அவ்வரசன் முன் தோன்றி "வேந்தே! உன்னுடைய பரிசுத்தமான பிரமசரியத்

தாலும், அடக்கத்தாலும், நியமத்தாலும், பக்தியினாலும் எல்லாவிதத்தாலும் உன் விஷயத்தில் மகிழ்ச்சியுள்ளவளாக இருக்கிறேன்; அச்சுவபதியே! விரும்பிய வரனைப் பெற்றுக்கொள்வாயாக" என்றனள்.

அச்சுவபதி, "வரத்தைக்கொடுப்பவளே! தருமத்தை அடைய வேண்டுமென்கிற விருப்பத்தால் என்றால் குழந்தை உண்டாவதற்காக இந்தக்காரியஞ் செய்யப்பட்டது தேவி! குலத்தை வளர்ப்பவர்களான அநேக புத்திரர்கள் எனக்கு உண்டாகவேண்டும். பாக்கியங்களில் புத்திரபாக்கியஞ் சிறந்ததென்பது ஆன்றோர்களின் கொள்கை. என்னிடத்தில் நீ அன்புடையவளாக இருந்தால் இந்த வரத்தை நான் விரும்புகிறேன்" என்று சொன்னான். சாவித்திரிதேவி, "அரசனே! உன்னுடைய எண்ணத்தை முன்னமே அறிந்து நளினமிசை வைகும் நான்முகக்கடவுள் உனக்குப் புத்திரனைத் தருவதாக உரைக்கப் பட்டிருக்கிறார். நல்ல ஒளியுள்ள ஒரு பெண்குழந்தை உனக்குப் பிறக்கும்" என்று அருள்புரிந்து மறைந்தனள். இறைவன் தனது நகரத்திற்குச் சென்றான்.

மறநெறி தவறாத அம்மன்னன் குடிகளைத் தருமத்தால் காப்பாற்றிக்கொண்டு அரசுசெய்து வந்தான். சிலநாட்களுக்குப்பின் அவ்வரசனுடைய மூத்தமனைவி கருவடைந்தனள். மநுவின் புதல்வியான அந்த உத்தமியின் கருப்பமானது வளர்பிறை மதிபோல் வளர்ந்தது மகப்பெறுங்காலம் வந்தவுடன் தாமரை மலர்போன்ற கண்களுள்ள ஒரு பெண்மகவைப் பெற்றாள். மன்னன் மகவைக் கண்டு மகிழ்ந்து சாவித்திரி தேவியின் திருவருளால் பிறந்ததனால் அக்குழந்தைக்கு சாவித்திரி என்று பெயர் சூட்டினன் அந்தணர்களும் ஆன்றோர்களும் அக்குழந்தையை அன்புடன் ஆசீர்வதித்தார்கள். எல்லா நலன்களும் அமைந்துள்ள அக்கன்னிகை இலக்குமி தேவியே உருவெடுத்துவந்ததுபோல் வளர்ந்து வந்தாள், கல்வி கேள்விகளிற் சிறந்தவளானாள்; மங்கைப்பருவத்தை யடைந்தாள்; அழகிய இடையையுள்ளவளும், குளிர்ந்த பார்வையுள்ளவளும், பொற்பாவை போன்றவளுமாகிய அந்தப்பெண்ணை ஜனங்கள் பார்த்து, "தேவகன்னியே இந்தப் பெண் வடிவத்துடன் வந்திருக்கிறாள்" என்று கொண்டாடினார்கள். காந்திமிக்க அக்கட்டழகியை அவள் காந்திக்குத் தாம் இணையில்லாமையால் ஒருவனாவது மனைவியாகவரிக்க

யில்லை. அப்பெண்மணி பருவகாலத்தில் நீராடி உபவாசமிருந்து தேவதையை வந்தனம்பண்ணி விதிப்படி அக்கினியில் ஹோமஞ்செய்து மறையவர்களை மந்திரங்களைச் சொல்லச்செய்தாள். பிறகு தேவ தைக்குச் சூட்டக்களைந்த மலர்மலரை யெடுத்துக்கொண்டு பிதாவினிடம் வந்து வணங்கி, அந்த மலர்களை பிதாவிடம் தந்து கரங்களைக் குவித்து அருகில் நின்றாள்.

சித்திரையை யனையவளும் யௌவனப்பருவத்தி லிருப்பவளும் ஆகிய அந்தத் தன்னுடைய மகளை வரன்களால் வரிக்கப்படாமலிருத் தலை யெண்ணி, அரசன் மனம் வருந்தி, "மகளே! இது உனக்குக் கன்னிகாதான காலம்; ஒருவரும் என்னிடத்தில் வந்து கேட்க வில்லை; உனக்குத் தக்க கணவனை நீயே வரிப்பாயாக, உன்னால் விரும்பப்பட்டவனை எனக்குத் தெரிவித்தால் நான் நன்கு ஆராய்ந்து கொடுப்பேன். தக்கசமயத்தில் தக்க வரனுக்குப் பெண்ணைக்கொடுக் காத பிதா இகழப்படத்தக்கவன். ருதுகாலத்தில் மனைவியை யடை யாத பதியும் இகழத்தக்கவன்; பிதா பரலோகம்போனபிறகு தாயைக் காப்பாற்றாத புத்திரனும் இகழத்தக்கவன். குழந்தாய்! கணவனைத் தேடுவதில் நீ விரைவுசெய்; தேவதைகள் என்னை இகழாமலிருக்கு மாறு செய்' என்று மந்திரிகளைப்பார்த்து பிரயாணத்திற்கு வேண்டிய வாகனாதி முதலியவைகளும் உடன்செல்லவேண்டும்" என் றான். பெரிய மனமுடைய அந்த சாவித்திரி நாணத்துடன் பிதாவை வணங்கி அவனுடைய சொல்லை நன்கு அறிந்து ஆலோசியாமல் புறப் பட்டாள். பொன்னாலாகிய தேரிலூர்ந்து வயதுமுதிர்ந்த மந்திரிகளால் சூழப்பட்டு ராஜரிஷிகளுடைய அழகிய தவவனங்களை அடைந்தாள். அங்கே பூசிக்கத் தக்கவர்களான முதியவர்களை அடிவணங்கிக் கொண்டு முறைமையாக எல்லா வனங்களையுமே அடைந்தாள்; தரு மத்தைச் செய்துகொண்டே சென்றாள்.

சாவித்திரி இவ்வாறு எல்லாத்தீர்த்தங்களையும் எல்லா ஆச்சிரமங் களையும் அடைந்து மந்திரிகளோடு பிதாவின் வீட்டுக்குத் திரும்பிவந் தாள். மத்திரதேசாதிபதியாகிய அரசன் நாரதருடன் பேசிக்கொண் டிருந்தான். அந்த சமயத்தில் அவ்விடத்தில் வந்த சாவித்திரி இரு வரையும் தலைவணங்கி நின்றாள். நாரதர் "அரசனே! உன்னுடைய இந்தப்பெண் எங்கே போயிருந்தாள்? எவ்விடத்திலிருந்துவந்தாள்? பருவமடைந்த இந்தப்பெண்ணை ஏன் தகுந்த வரனுக்குக்கொடாம லிருக்கின்றாய்? என்று வினவ; அச்சுவபதி "மாதவரே! இந்தக்

காரியத்திற்காகவே அனுப்பப்பட்டிருந்த இந்தப்பெண் இப்பொழுது தான் வந்தாள், இவளால் வரிக்கப்பட்ட கணவனை இவளிடமிருந்து கேளும்" என்று கூறி விரிவாகக் கூறுமாறு மகளுக்குக் கட்டளையிட்டான்.

சாவித்திரி "சாளுவ தேசத்தில் தருமநெறி தவறாத த்யுமத்சேனன் என்னும் அரசர் ஒருவர் அரசாட்சி செய்தார்; அவர் பிறகு குருடரானார்; அறிவிற் சிறந்த அவர் கண்களையிழந்து சிறுவரான ஒரு புத்திரருடனிருந்தமையால், இந்தச்சமயத்தில் அவருடைய ராஜ்யமானது அருகிலிருக்கும் பழைய பகைவரால் கவரப்பட்டது. அவர் சிறு குழந்தையுடனும் மனைவியுடனும் கானகஞ் சென்றார். பெரிய காட்டையடைந்த அவர் கடுமையான விரதத்துடன் தவம் புரிந்தார். அவருடைய புத்திரரும் தபோவனத்தில் வளர்கின்றவருமான சத்தியவான் என்கிற உத்தமரை எனக்கு ஒத்த கணவனென்று மனத்தினால் வரித்தேன்" என்றனள். நாரதர் "அரசனே! அந்தோ! சாவித்திரியினால் பெரிய தவறு செய்யப்பட்டது. சத்தியவான் குணத்திற் சிறந்தவனானபடியால் அவனை இவள் அறியாமையால் வரித்தாள். அந்த சத்தியவானுடைய பிதா சத்தியத்தைச் சொல்லுகிறான்; மாதாவும் சத்தியத்தைச் சொல்லுகிறாள்; அதனால் அந்தணர்கள் அவனுக்குச் சத்தியவான் என்று பெயரிட்டார்கள்; அந்தச் சிறுவனுக்கு குதிரைகளிடத்தில் பிரியமதிகம்; அவன் மண்ணால் குதிரைகளைச் செய்கிறான்; சித்திரத்திலும் குதிரைகளை எழுதுகிறான்; அதனால் அவனை "சித்திராசுவன்" என்றுஞ் சொல்லுகிறார்கள்" என்று கூற; அரசன் முனிநாதா! இப்பொழுது அந்த அரசகுமாரன் ஒளியுள்ளவனாக இருக்கின்றானா? அறிவிற் சிறந்தவனா? பொறுமையுள்ளவனா? சூரனா? சத்தியவாதியா? தாய்தந்தைகளிடத்தில் அன்புடையவனா?" என்று வினவினான். நாரதர் "சத்தியவான் சூரியனைப்போன்ற ஒளியுள்ளவன்; அறிவில் வியாழபகவானுக்கு ஒப்பானவன்; மகேந்திரனைப் போன்ற வீரன்; பூமியைப் போன்ற பொறுமையுள்ளவன்" என்று சொன்னார். அரசன் "அவ்வரசகுமாரன் கொடையாளியா? ஆன்றோர்களுக்கு நன்மை செய்பவனா? சத்தியவாக்கியமுள்ளவனா? இனிய தோற்றமுள்ளவனா? சிறந்த அழகுள்ளவனா? பெருந்தன்மையுள்ளவனா?" என்று வினவினான். நாரதர் "அந்த சாளுவமன்னன் மகன் தனது சக்திக்குத்தக்கபடி கொடுப்ப

தில் சங்கிருதிமகனாகிய ரந்திதேவனுக்கு நிகரானவன்; உசீநரகுமாரனாகிய சிபியைப்போல ஆன்றோர்களுக்கு நலத்தைச் செய்பவன்; அரிச்சந்திரனைப்போன்ற சத்தியவாக்குள்ளவன்; யயாதியைப்போல பெருந்தன்மையுள்ளவன்; சந்திரனைப்போன்ற இனியதோற்றமுள்ளவன்; அசுவினி தேவர்களைப்போல உருவத்தையுடையவன்; பேசுந்திறமையுள்ளவன்; மனத்தை அடக்கினவன்; மகாசூரன்; நல்ல நட்புடையவன். குணமுள்ளவற்றிலும் குற்றத்தை ஏற்றுச் சொல்லுவதாகிய அசூயை இல்லாதவன்; தீயகாரியங்களில் நாணமுடையவன்; தைரியம் அவனிடத்திலேயே நிலைபெற்றிருக்கிறது; உள்ளும்புறமும் ஒத்தவன். சுருக்கமாக அவனிடத்தில் எல்லா நற்குணங்களும் குடிகொண்டிருக்கின்றன" என்றார்.

அசுவபதி "பகவானே! அந்த சத்தியவானைத் தேவரீர் எல்லாக்குணங்களோடுங் கூடியவனென்று சொல்லுகிறீர், அவனிடத்தில் ஏதாவது குறைகள் உண்டாயின் அவைகளையுஞ் சொல்வீராக" என்று வினவ; நாரதர் "ஒரே ஒரு குறை அவனது எல்லாக்குணங்களையும் மீறிநிற்கிறது; அந்தக்குறை முயற்சியால் நீக்கமுடியாதது; அந்த ஒரு குறையைத்தவிர வேறு குறையில்லை; அந்த சத்தியவான் இன்றுமுதல் ஓராண்டுடன் ஆயுள்முடிந்தவனாகத் தேகத்தை இழக்கப் போகிறான்" என்று சொன்னார். அரசன் "சாவித்திரி! வேறு வரனை வரிப்பாயாக! கல்யாணி! நீ வரித்த சத்தியவான் ஒரு வருடத்தில் உயிர் துறப்பான் என்று நாரதர் சொல்லுகிறார், வேறு கணவனைத் தேடு" என்றான்.

சாவித்திரி "அப்பா! தந்தைமுதலியோரால் கிடைத்தபொருளை சகோதரர்கள் பங்கிட்டுக்கொள்வது ஒரேதடவை, கன்னிகை தந்தைமுதலியோரால் கொடுக்கப்படுவது ஒரேதடவை; பசுமுதலியவற்றைத் தானஞ்செய்வதும் ஒரேதடவை இந்த மூன்றும் ஒவ்வொரு தடவையே என்கிறார்கள். நீண்ட ஆயுளுள்ளவனோ குறைந்த ஆயுளுள்ளவனோ குணமுள்ளவனோ குணமில்லாதவனோ என்னால் கணவன் ஒரு தடவை வரிக்கப்பட்டுவிட்டான்; நான் இரண்டாமவனை வரிக்கமாட்டேன். மனத்தினால் நிச்சயஞ்செய்து பிறகு வாக்கினால் சொல்லப்படுகிறது. பிறகு சொன்னவண்ணம் அது செய்கையால் செய்யப்படுகிறது; ஆகையால் எனக்கு மனமானது பிரமாணம்" என்று சொன்னாள். நாரதர் "மகிபால! நின் புதல்வி திடசித்தமுடையவள்; எவ்விதத்திலும் இவளைத் திருப்பமுடியாது; சத்தியவான் குணத்திற்

சிறந்தவன்; அவனுக்கு இவளைத் தடைசெய்யாது கொடுப்பதே நலம்
என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார். மன்னன் "முனிநாதா!
தேவரீர் எனக்குக் குருநாதரல்லவா? இவளுடைய நிச்சயத்தை
மாற்றமுடியாது, உமது மொழிப்படியே செய்கிறேன்" என்றான்.
நாரதர் "உனது மகளைத் தடைசெய்யாது சத்தியவானுக்குக்கொடுப்
பாயாக, உங்கள் அனைவருக்கும் மங்களம் உண்டாகுக" என்றுகூறி
ஆகாயவழியே சென்றார். அரசன் விவாகத்திற்கு வேண்டியவற்
றைச் சித்தஞ்செய்தான்.

அச்சுவபதி, அறிவிற் சிறந்த அந்தணாளரையும் புரோகிதர்களை
யும் மந்திரிகளையும் அழைத்துக்கொண்டு நல்ல நாளில் கன்னிகை
யுடன் புறப்பட்டான். பரிசுத்தமான வனத்திலுள்ள தியுமத்சேன
னுடைய ஆச்சிரமத்தையடைந்து கால்நடையாக நடந்துபோய்
அந்த ஆச்சிரமத்தில் தருப்பையாசனத்திலிருப்பவனும், கண்ணில்லா
தவனும் குணசீலனுமாகிய தியுமத்சேனனைக் கண்டான். அச்சுவபதி
அந்த ராஜரிஷியைத் தக்கபடி பூசித்து "நான் அச்சுவபதி" என
றான். தருமங்களையறிந்தவனாகிய தியுமத்சேனன் அச்சுவபதிக்கு
அருக்கியத்தையும் ஆசனத்தையும் பழங்களையுந்தந்து "வந்த கார
ணம் யாது?" என்று வினவினான். அச்சுவபதி "ராஜரிஷியே!
அழகியவளான சாவித்திரி என்கிற பெண் என்னுடைய பெண்;
இதோ இருக்கிறாள்; நீர் இந்தப்பெண்ணை உமக்கு மருமகளாக நமக்
குரிய முறைப்படி என்னிடத்தினின்று பெற்றுக்கொள்ளும்"
என்றான்.

தியுமத்சேனன் "பார்த்திபரே! நாங்கள் ராஜ்யத்தினின்று
நழுவினவர்களும் வனவாசமுள்ளவர்களும் நியமமுள்ளவர்களும்,
தவஞ்செய்பவர்களுமாகத் தருமத்தை அனுஷ்டிக்கிறோம். வன
வாசத்தில் சுகமே கிடையாது; துன்பத்தையறியாத நின்மகள் இந்த
வனவாசத் துன்பத்தை எவ்வாறு சகிப்பாள்?" என்றான். அச்சுவ
பதி "ஐய! சுகதுக்கம் மாறிமாறிவரும்; சுகமுந்துக்கமும் மனத்
தைப்பொறுத்திருக்கின்றன; நல்ல நிச்சயத்துடன் உம்மிடம் வந்
திருக்கிறோம். சிநேகத்தால் வணங்குகிற என் விருப்பத்தை நீர்
கெடுக்கப்படாது, எனக்கு நீர் சம்பந்தத்திற்குத் தகுந்தவர்; உமக்கு
நான் ஒத்தவன்; என்னுடைய மகளை சத்தியவானுக்கு மனைவியும்
உமக்கு மருமகளுமாக ஏற்றுக்கொள்ளும்" என்று வேண்டினான்.

உ

ஸ்ரீவள்ளிநாயகன் துணை

ஜீவகாருண்ய ஒழுக்கம்

A. திருஞானம், சமையபுரம்.

கடவுள் சகல உலகங்களையும் அதில் தோன்றும் வஸ்துக்களையும் படைத்தார். அவற்றில் சில வஸ்துக்கள் உணர்ச்சியற்று ஜடங்களாகவும் மற்றும் சில வஸ்துக்கள் அறிவுடன்கூடி ஜீவர்களாகவும் உள்ளன. ஜீவன் என்பது கடவுளின் சக்தியாம்சமாகும், அதுவே ஆன்மா அல்லது உயிர் எனவும்படும். உயிர் தோன்றி விளங்குவதற்கு பூதங்களால் ஆகிய உடல் இருப்பிடமாய் உள்ளது. ஜீவன் கடவுள் விளக்கம் ஆகையால், அது அழிவதில்லை. பூதகாரியமான

தியுமத்சேனன் "முந்தியே உம்முடைய சம்பந்தத்தை நான் விரும்பியிருந்தேன், நான் இராஜ்யத்தை இழந்திருப்பதால் ஆலோசித்தேன்; நான் முன் விரும்பிய இந்த எண்ணம் இப்போது நிறைவேறட்டும்; சாவித்திரி எனக்கு மருமகளாகட்டும்" என்றான்.

இருமன்னர்களும் சேர்ந்து அங்குள்ள எல்லா முனிவர்களையும் வருவித்து, சாவித்திரிக்கும் சத்தியவானுக்கும் முறைப்படி விவாகத்தை நடத்தினார்கள். மகளுக்குவேண்டிய சீதனங்களை மகிழ்ச்சியுடன் கொடுத்துவிட்டு சம்பந்தியிடம் விடைபெற்று தனது நகர் சென்றான். சத்தியவான் சாவித்திரியை மனைவியாகக்கொண்டு மனமகிழ்ந்தான். மனத்தினால் விரும்பிய அக்கட்டழகனைக் கணவனாகப்பெற்று சாவித்திரியும் மகிழ்ந்தாள். தந்தை சென்றபின் சாவித்திரி ஆபரணங்களைக் கழற்றிவிட்டு மரவுரி யுடுத்திக்கொண்டாள். பணிவிடைகளாலும் குணங்களாலும் நட்பாலும் இந்திரியங்களுடைய அடக்கத்தாலும் வேண்டியவற்றைச் செய்வதாலும் மாமி மாமன் கணவன் இவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தாள். மாமியாரையும் மாமனாரையும் அடக்கத்துடன் இனிய சொல்லுடனும் உணவுகளைத்தந்து உபசரித்துவந்தாள். ஏகாந்த உபசாரத்தாலும் அன்புடன் உபசரிப்பதாலும் கணவனுக்கு மகிழ்ச்சியை விளைவித்தாள்.

(தொடரும்).

தேகம் அழியுந்தன்மையுடையது. தேகம் அழியும்போது அதிலுள்ள ஆன்மா அழியாமல் தான் செய்த ஊழ்வினைக்குத்தக்கபடி வேறு உருவத்துடன் மறுபடியும் ஜனிக்கின்றது.

இவ்வாறு ஒரு ஜீவன் அடையத்தக்க பிறப்பு பலவகைப்படினும் அவை தேவர், நரர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்ற ஏழு வகைகளில் அடங்கும். அவை எல்லாம் மாயையில் வெளிப்பட்டு பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம் என்னும் விகற்பங்களால் இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றன. ஜீவன்கள் எல்லாம் ஒரே கடவுளின் சிருஷ்டி. ஆகலால் ஒரு (ஜீவன்) வருக்கொருவர் சகோதரர் ஆகிறார். ஆகலால் ஒரு ஜீவன் துன்பப்படுவதைக்காணும்போதும், துன்பப்படும் என்று அறியும்போதும் மற்றவர்கள் மனம் இரங்குவது ஆன்ம உரிமை ஆகும் அதற்குத்தான் ஜீவகாருண்யம் என்று பெயர். பரஜீவர்களது துன்பத்தைக்கண்டு மனமிரங்கி அத்துன்பத்தை நீக்கி இன்புறச்செய்வது ஜீவகாருண்ய ஒழுக்கம் எனப்படும்.

ஜீவர்களுக்கு உண்டாகும் பலவித துன்பங்களிலும் பசியால் வரும் துன்பமே மிகவுங்கொடியது. தாகம், பிணி, இச்சைமுதலியவற்றைச் சகித்துக்கொண்டு ஜீவர்கள் உயிர்வாழலாம் அல்லது வேறு உபாயங்களால் நிவர்த்திசெய்துகொள்ளலாம். அப்படிச்செய்வதால் உயிர்ச்சேதம் உண்டாவதில்லை. ஆனால் பசிநோயை ஆகாரம் இன்றி வேறு உபாயங்களால் நிவர்த்திசெய்யமுடியாது. பசியைப்பொறுத்துக்கொண்டு சும்மா இருக்கவும் இயலாது அப்படியிருந்தால் ஜீவன்கள் உயிர் நீங்குவது நிச்சயம்; ஆகையால் எளியவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே மேலான ஜீவகாருண்யம்; அது பரஜீவகாருண்யம் எனப்படும். உடுக்க உடையும், இருக்க இடமும், உதவியாகப் பொருளும் இல்லாமையால் வருந்தும் ஏழைகளது குறைகளைத் தீர்ப்பது அபரஜீவகாருண்யமாகும். ஆகையால் ஜீவர்களது பசிப்பிணியை நீக்குவதுதான் ஜீவகாருண்யத்திற்கு முக்கிய லக்ஷியமாகும். இதைக் கையாண்டுவந்தால் ஏழைகளின் மற்ற குறைகளையும் நீக்கத்தக்க உபகாரசக்தி தானே உண்டாகும்.

ஜீவகாருண்யம் உள்ளவர் ஏழைகளுக்குப் பசியாற்றுவிக்கும்போது அவரது ஜாதி, மதம், ஒழுக்கம், செய்கைமுதலியவற்றில் வேற்றுமை பாராட்டாமல் எல்லோரையும் சமமாகப் பாவித்தல்

வேண்டும். தமது விதிவசத்தால் கூன், குருடு, செவிடு முதலான அங்கஈனர்களிடத்தில் விசேஷ அன்புகொண்டு அவர்களது பசியை முதலில் நீக்கவேண்டும். அற்ப சக்தியுடைய சம்சாரிகளகூட தமது மாதா பிதா மனைவி மக்களை காப்பாற்றுவதோடு தங்கள் செலவை சிறிது குறைத்துக்கொண்டாகிலும் ஏழைகளுக்கு உதவிபுரியவேண்டும். தக்க இயல்புள்ள சம்சாரிகள் தமது குடும்பத்தையும் பந்து மித்திரர்களையும் அடியார் அயலார்களையும் உணவளித்து ரக்ஷித்தல் வேண்டும். கலியாணம் முதலிய சடங்குகளுக்காக ஆடல், பாடல் அலங்காரம், ஊர்கோலம் முதலான ஆடம்பரங்களில் தங்கள் பொருளை வீணசெலவு செய்யும் செல்வர்கள் அப்பொருளைக்கொண்டு ஏழைகளுக்குப் பசிதீர்த்து இன்பம் அளிக்கவேண்டும். அவ்வாறு பசித்தவர்க்கு உணவு கொடுப்பதில் தாவரங்களில் காய்கறி, கிழங்கு வித்துக்களாலாகிய சுத்த ஆகாரத்தையே வழங்கவேண்டும். ஏனெனில் அவற்றைக் கிரகிக்கும்போது அத்தாவரங்களுக்கு உபத்திரவமாவது உயிர்ச்சேதமாவது உண்டாவதில்லை. மாமிச ஆகாரம் தாமச குணத்தை விருத்திசெய்வதினாலும் அதைச் சம்பாதிப்பதில் உயிர்க்கொலை ஏற்படுவதினாலும் அதை உபயோகிப்பது பாவச்செயல்ஆகும். ஒரு ஜீவனைக்கொன்று மற்றொரு ஜீவனுக்கு பசிநீக்குவதில் புண்ணியமுமில்லை; தெய்வ சம்மதமுமில்லை.

ஜீவகாருண்யம் ஒழுக்கத்தால் அடையும்பலன்கள் அளவற்றன. பசிநோயால் வருந்திச் சோர்ந்துவரும் ஏழைகளுக்கு அன்னம் கொடுத்து திருப்திசெய்தால் தீராத கருமரோகங்களான சூலை குன்மம், குஷ்டம் முதலியவையும் தீர்ந்துபோகும். சந்ததியில்லாமல் ஏங்கிநிற்கும் சீமான்கள் ஏழைகளுக்கு உணவளிக்கும் விரதத்தை அனுஷ்டித்து வந்தால் புத்திரபாக்கியத்தைப் பெறலாம். அற்ப ஆயுளைப்பெற்ற அரிஷ்டர்களும் அன்னதானம் செய்து அதன்பலத்தால் தன் ஆயுளை விருத்திசெய்துகொள்ளலாம். பசிக்குப் போஜனமளிக்கும் புண்ணியவான்களுக்கு காற்று மழையால் கஷ்ட நஷ்டம் வாரா; கொடுநோயால் துன்பம் நேராது; கள்வர் சத்துருக்களிடம் பயம் தோன்றாது; அவர்களுக்கு கல்வி, செல்வம், அறிவு முதலியன மிகுதியும்உண்டாகும்; அவரது தொழில்களில் முயற்சிக்கு அதிகமான லாபம் கிடைக்கும்; அவர் பயிரிடும் நிலங்களில் எதிர்பாராத பலன் உண்டாகும்; அவரிடத்தில் அரசனிடத்தும் நன் மதிப்பு ஏற

உ

ஓம் குஹாய நம

குரு சிஷ்ய லக்ஷணம்

(225-ம் பக்கத் தொடர்ச்சி)

ப்ரும்ம வைவர்த்த புராணத்தில் பிரம்மகாண்டம் அ 11, சு.18ல்

நசவ்யாதிஸ ஸமச்சத்ருர்ந பூஜ்யோ குரோ பர:

நாஸ்திமாத்ருஸமோ-பந்துர் ந மித்ரம் பிது: பரம்,

வியாதிக்கு ஸமானமான சத்துருவுமில்லை. குருவைவிட பூஜிக்கத் தக்க சிரேஷ்டனொருவனுமில்லை, தாய்க்குச் சமானமான பந்துவுமில்லை, தகப்பனுக்கு ஸமானமான நண்பரில்லை என்று கூறுகிறது

படும், ஏழைகளின் பசியை நீக்கி அவர் முகத்தில் தழைத்துவளரும் திருப்தி இன்பத்தைக்கண்டவர் தாமும் அவ்வின்பத்தை அனுபவிக்கிறார். தருமங்களிற் சிறந்த அன்னதானத்தைச் செய்பவர் யோகிகளுக்குச் சமமாவர்; ஏழைகள் உண்பதைத் தாம் உண்ணுவதாக நினைப்பவர் ஞானிகளை ஒப்பார், ஏழைகளின் திருப்தியாகிய கடவுள் விளக்கத்தைக் கண்டவர் கடவுளைக் கண்டவரே ஆவர். சுருங்கச் சொல்லின் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை கடைப்பிடித்து நடப்பவர் மோக்ஷவீட்டை அடைந்து சாஸ்வதமான மோக்ஷ இன்பத்தை அனுபவிப்பார். ஜீவகாருண்யம் மோக்ஷவீட்டைத் திறப்பதற்கு ஓர் திறவுகோல்.

மோக்ஷ சாதனங்களைத் தேடிக்கொள்வதற்காகவே மானிட தேகம் ஆன்ம விளக்கமும் அருள் விளக்கமும் உடையதாய் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. தேகம் நிலையற்றதாகையால் எந்த நிமிஷத்திலும் அழியக்கூடும். அது அழிந்தால் மறுபடியும் இப்பிறவி கிடைப்பது அரிது. ஆகையால் இத்தேகம் அழிவதற்கு முன் மனிதர் யாவரும் ஜீவகாருண்யம் என்னும் சாதனத்தைக்கொண்டு முக்தி இன்பத்தைத் தேடிக்கொள்ளக்கடவர். மனிதப்பிறவியால் அடையத் தக்க பெரும் பதவிகளில் மோக்ஷமே அது ஆன்மலாபம் எனப்படும்.

ஆகவே சீடனுடைய கரங்களானது எப்பொழுதும் குருநாதனையே பூசிக்கவேண்டும். மனமானது அவருடைய திருநாமத்தையே மனனம் செய்யவேண்டும்; செவியானது அவருடைய கீர்த்தியையே கேட்கவேண்டும்; நயனமானது அவருடைய திருமேனியையே தரிசிக்கவேண்டும். சரீரமானது அவருக்குப் பணிவிடை செய்வதிலேயே கிடக்கவேண்டும்; வாக்கானது அவருடைய பெருமையையே பேசவேண்டும், தான் செய்யும் நற்கருமங்களெல்லாம் அவரைச் சேர்ந்ததாக எண்ணவேண்டும்; தானறியாமல் செய்யும் குற்றங்களெல்லாம் தன்னைச் சேர்ந்ததாக எண்ணவேண்டும். அமெரிக்காவில் நியூயார்க்கு (New York) என்னும் நகரத்தில் கி. பி. 1896-ம் வருஷம் ஸ்ரீமத் ஸ்வாமி விவேகானந்தர் தம் குருநாதனுடைய புகழையே பொருளாகக்கொண்டு "என் குருநாதன்" என்று ஒரு உபந்நியாசம் செய்தார்,

"ஞானங்களையாவது, கருமங்களையாவது, ஒரு வார்த்தையேனும், நான் பிரசங்கம் செய்திருந்தால் அவையெல்லாம் என் குருநாதனையே சேர்ந்தது, அப்பிரசங்கங்களிலுள்ள குற்றங்குறைகளெல்லாம் என்னைச் சேர்ந்தது" என்று கூறியிருக்கிறார்.

சீடனுக்கு அவரைத்தவிர பந்துகிடையாது; அவரைவிட அன்னியமானதும்; சிரேஷ்டமானதும் எதுவும் இல்லை. அவரே தேவன், அவரே பந்து, அவரே ஆத்மா, அவரே ஜீவன், குருவே சிரேஷ்டமான தருமம், குருவே சிரேஷ்டமான பதவி, குருவே பிரமமா, குருவே விஷ்ணு, குருவே ஈஸ்வரன், ஆகவே குருவைக்காட்டிலும் இம்மூன்று உலகங்களிலும் சிரேஷ்டன் ஒருவனுமில்லை. ஈஸ்வரனிடத்தில் எத்தன்மையான பக்தி பாராட்டுகிறாயோ அத்தன்மையான பக்தி குருநாதனிடத்தில் எவன் பாராட்டுகிறானோ அவன் பிரம்மத்தை அறிந்தவனாய் பிரம்மமாக ஆகிறானென்பது வேதத்தினுடைய கட்டளை என்று சாட்டியாயநீயோபநிஷத்தில்

குருரேவ பரோதர்மோ குருரேவ பராகதி: யஸ்யதேவே பராபக்திர்யதா
தேவே ததாகுரௌ, ஸப்ரம்ம வித்பரம் ப்ரேயாதி திவேதானுசாஸனம்

என்று கூறப்படுகிறது.

தெய்வம் அவரே என்பதை கீழ்வரும் ப்ரமாணத்தாலறிக. குருகீதை:

குருஸ்ஸிவோ குருர்தேவோ குருர்பந்து ஶரீரிணாம்,
குருராத்மா குருர்ஜீவோ குரோரந்யம் நவித்யதே

என்றும், யோகசிகோபநிஷத்தில்

குருர்ப்ரஹ்மா குருர் விஷ்ணு: குருர் தேவஸ்ஸதாசிவ:
ந குரோரதிகஞ் கிஞ்சித் த்ரிஷு லோகேஷு வித்யதே திவ்யஜ்ஞாநோ
பதேஷ்டாரம் தேசிகம் பரமேச்வரம் | பூஜயேத் பரயா பக்த்யா
தஸ்ய ஜ்ஞாந பலம் லபேத் | யதா குரு ஸ்ததைவேசோ யதைவேசஸ்ததா குரு:
பூஜநீயோ மஹாபக்த்யா ந பேதோ வித்யதேநயோ: |

என்றும், திருமந்திரத்தில்

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென்பது குறித்தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே

எனவும் வருவனவற்றாற் காண்க.

இவ்விதம் குருகுலவாசஞ் செவ்வையாய்ச் செய்யவேண்டும். ஏனெனில் சற்குருவினால் உபதேசிக்கப்பட்டபோதிலும் அசம்பாவனை, சம்சயபாவனை, விபரீதபாவனை என்ற மூன்றுவித பாவனைகளிலும் ஜீவேஸ்வரபின்னபேதம், ஜீவாத்மாக்களின் பரஸ்பரபேதம், ஜீவ ஜடங்களின் பேதம், ஈஸ்வரஜடங்களின் பேதம், ஜடங்களின் ஒன்றுக்கொன்று பேதம் என ஐந்துவகையாயுள்ள ப்ரமைகளினாலும், குருபதேசவாக்கியங்களும் லக்ஷியங்களும் மனத்துக்கு பிடிபடாதாகையால் நன்றாய் குருகுலவாசஞ்செய்து அவருடைய ஆக்ஞையின் படி நடக்கிறதின்மூலமாய் சகலசந்தேகங்களையும் நிவர்த்தியாகிவிடும். பிறகுதான் குருபதேச லக்ஷியத்தில் மனது நிற்கும். இந்திரனென்பவன் பிரமவித்தையை உபதேசிக்கப்பெற்றபோது அதாவது

ஏஷோக்ஷிணி புருஷோ த்ருஸ்யத ஏஷ
ஆத்மேதிஹோவாசைதத் ம்ருதமபயமேதத்ப்ரஹ்மேதி
(சாந்தோ—பிரபா—4—கண்டம்—15—வாக்—1

ஓ தேவதைகளுக்கு ராஜனான இந்திரனே உன்னுடைய நேத்திரத்தின்மூலமாய் நீயே உன் எதிரே ஆகாசத்தில் பார்க்கிற சாயா புருஷனே ஆத்மா; அதுவே அம்ருதமானது; அதுவே அபயமானது; அதுவே பிரமம் என்று முதலில் உபதேசம்பெற்றுதான் தனித்து சென்று ஏகாந்தமாய் அநுஷ்டித்தும் மனத்திற்கு பிடிபடாமல் குருநாதனிடம் வந்தான். குருநாதனும் பலவிதமாய் வெளிப்படுத்தியும் இந்திரனுக்கு மனதில் படியவில்லை. அப்போது குருநாதனவர் "ஏ இந்திரா! நீ இன்னும் 'குருகுலவாசஞ்செய்து மனதிலுள்ள கல்மிஷங்களெல்லாவற்றையும் நிவர்த்தித்துக்கொண்டுவா" என்றனர்.

இந்திரனவன் விடாமுயற்சியுடன் குருகுலவாசஞ்செய்து மறுமுறை அவரிடத்தில் சென்றனன். அப்பொழுதும் குருநாதனவர் முதற் சொன்ன வாக்கியத்தையே உபதேசித்தார். அப்பொழுதும் புருகூனுக்கு மனத்திருப்படவில்லை. குரு—மறுபடியும் குருகுலவாசஞ்செய்யென்று அனுப்பிவிட்டார். இவ்விதமாக இந்திரன் விடாமுயற்சியால் நான்காந்தடவையில் ஸ்வானுபவத்தை யடைந்தானென்று உபநிடதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் மனதிலுள்ள கல்மிஷங்களெல்லாம் நிவர்த்தியாகும்பரியந்தம் நாம் ஞானத்தையடைய மாட்டோம்; குருகுலவாசம் செவ்வையாகச் செய்தால்தான் ஞானத்தையடையலாம்.

அவ்விதம் குருகுலவாசத்திலிருந்து ஞானத்தை யடைந்த பெரியோர்கள் சரித்திரத்தில் ஒன்றை வரைகுவாம்.

பல்வளங்களும் நிறைந்த சோழதேசத்தில் காவிரிநதிக்கரையில் சில பிராமணர்கள் வாழ்ந்துவந்தார்கள். வேதாத்யாயனம் பண்ணினவரும் தர்மவழியாகச் செல்லுபவருமாகிய ஒரு அந்தணருக்கு முன் செய்த தவப்பயனால் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சநந்தனன் என்று பெயரிட்டு வளர்த்துவந்தனர். குழந்தைக்கு செயிர்தீர் அறமும், வாய்மையும் பாருநேசமும் தூய்மைதங்கிய உள்ளமும் நல்லறமும் விளங்கின. எக்காரணத்தினாலும் கொடுஞ் சொற்களை உபயோகப்படுத்தாதவரும், அகங்காரமில்லாதவரும் தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளாதவரும் •ஆகிய நற்குணத்தையே பூஷணமாக உடையவருமாகிய சநந்தனரானவர் வளர்மதிபோல் வளர்ந்துவந்தனர். சநந்தனர், செல்வவந்தனர்களையும் தரித்திரர்களையும்பார்த்து மனம் சோகிப்பார். வாடியமலரைப்பார்த்து வாழ்வும் இப்படித்தானே வாடுமென மனம் வாடுவார்; வீடியதழையைக்கண்டு விழிநீருகுப்பார், இறந்து மண்ணாகி மறைந்தவரை எண்ணியெண்ணி ஏங்குவார் நாலால் தவழ்ந்து இரண்டால் நடந்து, மூன்றால்தள்ளாடி, ஏணியேறி எமலோகம்புகும் இவ்வுயிரை வெறுப்பார். மனைவி மக்கள், நண்பர், தாய்தந்தை, செல்வமென, மினுக்கும் இன்பமெலாம் நாடகமாடி நமனவாயப்படுமென உணர்ந்து, பவசாகரக் கடலைத்தாண்ட வேண்டுமென மனதிலுன்னி வாழ்ந்துவந்தார்.

(தொடரும்.)